## NEWS CLIPPING

Headline: **Save River Festival at National Zoo**

Publication : **Makkal Osai, Malaysia**

Section : **General News**

Page : **6**

Date : **31 July 2012**

# தேசிய மிருகக்காட்சி சாலையில் நதிகளின் தூய்மையைப் பேணும் விழா



எம்.பிரியா

கோலாலம்பூர், ஜூலை 31– ஜி.ஏ.பி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் ஆறுகளின் தூய்மையைப் பராமரிக்கும் விழா, தேசிய மிருகக்ககாட்சி சாலையில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆறுகளின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதோடு, நீர் வளங்களைப் பேணுவதற்கான விழிப்புணர்வையும் மக்கள் மனத்தில் ஏற்படுத்த இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

பல்வேறு வகையான கேளிக்கை நிகழ்ச்சிகளோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நதி விழாவில் 4,000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர். ஆறுகளைப் பற்றி சிறுவர்களுக்கு விரிவான விளக்கம் அளிக்கும் வண்ணம் சிறுவர்களுக் கான பல போட்டி நிகழ்ச்சிகளும் இதில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அரசு சார்பற்ற இயக்கங்கள், உலக சுற்றுச்சூழல் மையம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு 2007 ஆம் ஆண்டு முதல் இந்த விழிப்புணர்வு விழாவை ஜி.ஏ.பி. நிறுவனம் நடத்தி வருகிறது. இயற்கை வளம் சுற்றுச்சூழல் துறை அமைச்சின் துணை தலைமைச் செயலாளர் டத்தோ டாக்டர் முகமட் அலி பின் முகமட் நோர் உள்ளிட்ட பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

